2023 மார்ச் 24]

குறைந்திருக்கிறது. அதை அதிகப்படுத்துவதற்கு. . . (குறுக்கீடு) மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே இந்த சிறப்பம்சங்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலெல்லாம் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அவற்றில் வேலைவாய்ப்பு பெறுகின்ற வாய்ப்புகளை இந்த பாலிடெக்னிக் கல்லூரிகளில் உருவாக்குவோம் என்று சொன்னால், வருகின்ற காலங்களில் மாணவர்களுடைய எண்ணிக்கை உயரும். அந்த எண்ணிக்கையின் உயர்வைப் பொறுத்து, புதிய கல்லூரிகள் துவங்குவதைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோருக்கும் பொதுவாக, தெளிவான பதில் சொல்லிவிட்டார்கள். வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

33—

சுற்றுலா மாளிகை

***1303—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதிய சுற்றுலா மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடந்த 2022 ஆம் நிதியாண்டில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் திரு. க. கார்த்திகேயன் அவர்களும், திரு. தா. உதயசூரியன் அவர்களும் ஒரு கடிதம் தந்தார்கள். கள்ளக்குறிச்சி மாவட்டம் என்பது புதியதாக உருவாக்கப்பட்ட ஒரு மாவட்டம் என்பதால், அந்த மாவட்டத்தில் ஒரு சுற்றுலா

மாளிகை அமைக்க வேண்டுமென்று அவர்கள் கொடுத்த கடிதத்தின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, நிதி ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் இந்தப் பணிக்கு 24–3–2023–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. 31–3–2024–க்குள், அதாவது ஓராண்டு காலத்திற்குள் இந்த சுற்றுலா மாளிகை கட்டாயம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வணக்கம். 28–6–2021 அன்று, அதாவது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இந்த வினாவைக் கொடுத்திருந்தேன். அதனடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து, அதைக் கட்டுவதற்கு ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற பதிலுக்கு எங்கள் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றுப் பொறுங்கள். நான் இன்னும் subject–க்கே வரவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொன்னீர்கள் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்தேன். (குறுக்கீடு)*

திரு. மா. செந்தில்குமார்: *கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். ஏனெனில், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 27 வகுப்பறைகளுக்கு மேல் எடுத்து, அங்குதான் அனைத்து அரசுத் துறை அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. இதனால்,*

2023 மார்ச் 24]

அங்கேயிருக்கிற 10 வகுப்புகளின் மாணவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து பயிலக்கூடிய சிரமமான சூழ்நிலை உள்ளது. இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எனவே, மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடப் பணிகளை விரைந்து முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சராக நான் இருக்கிற காரணத்தால், அந்த மாவட்டத்தின் வளர்ச்சி குறித்து, அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, புதிதாக மாவட்ட அதிகாரிகள் அங்கே பொறுப்பேற்க வேண்டுமென்று, பல்வேறு துறைகளின் மாண்புமிகு அமைச்சர்களிடம் நானே நேரடியாக மனுக்கள் கொடுத்து, தற்போது புதிய அதிகாரிகள் பலர் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நானும் அறிவேன். அதே நேரத்தில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில், சென்ற அரசாங்கம் தேர்வு செய்த இடம் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம். திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் என்பதால், உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று, பின்னர் உச்ச நீதிமன்றம் தடை ஆணை வழங்கியிருந்த நிலையில், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றோம். உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் வழக்கு நடத்தி, வழங்கப்பட்ட* Stay order withdraw *செய்யப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு வாதங்கள் முடிந்து, தற்போது* judgement reserved stage*-ல் இருக்கிறது. உயர் நீதிமன்றம் என்னென்ன கட்டளைகள் இட்டதோ, அவற்றையெல்லாம் பொதுப் பணித் துறை சார்பாக நிறைவு செய்திருக்கிறோம். விரைவில் நீதிமன்றத்தின் ஆணை பெற்று, அந்தக் கட்டடங்களை விரைந்து கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நான்குவழி சந்திப்பிலிருந்து, தியாகதுருகம் செல்லும் சாலை, சின்னசேலம் செல்லும் சாலைகள்*

குறித்து கடந்த கூட்டத் தொடரில் questions கேட்டிருந்தேன். அவை தற்போது போடப்பட்டிருக்கின்றன. அதற்கும் தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சாலை, bypass road இல்லாத காலத்தில், 40, 50 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்ட சாலை. தேசிய நெடுஞ்சாலை கள்ளக்குறிச்சி உள்ளேயிருந்து வெளியே வருவதால், அந்தச் சாலை அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அதனால் தற்போது அந்தச் சாலையை விரிவாக்கம் செய்தால்தான், அதைச் சீரமைக்க முடியும். அதைச் செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Salem Main Road-ல், Vetri Lodge, Sri Jayam Child Care Centre இருக்கும் இடத்தில் ஒரு சிறிய குறுகிய பாலம் இருக்கிறது. அந்தப் பாலப் பகுதியில் நிறைய accidents நடக்கின்றன. இரவு நேரங்களில் bike-ல் போகிறவர்கள் அனைவரும் அங்கே கீழே விழுவதும், மருத்துவமனைக்குச் செல்வதுமான சூழ்நிலை இருக்கிறது.

மேலும், ஒரு question. ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் கள்ளக்குறிச்சியிலிருந்து திருவண்ணாமலை கோயிலுக்கு இலட்சக்கணக்கான மக்கள் கிரிவலம் செல்கிறார்கள். அதேபோன்று திருவண்ணாமலை கோயிலுக்கு திருமணம் செய்வதற்காக சென்றால்கூட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோயிலுக்குப் போகிறவர்கள் எல்லாம் கள்ளக்குறிச்சியிலிருந்துதான் போகிறார்களா? (குறுக்கீடு)

திரு. மா. செந்தில்குமார்: இது முக்கியமான கேள்வி, அவசியமான கேள்வி. ஏனென்றால், அவர்தான் எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சர். அந்த வழியாகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சென்று வருகிறார்கள். எனவே, கள்ளக்குறிச்சி–திருவண்ணாமலை சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டும். இது நீண்டநாள் கோரிக்கை. தற்போது தியாகதுருகம் சென்று, அங்கிருந்துதான் திருவண்ணாமலைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் 4 கிலோ மீட்டர் வரை எனது தொகுதியைச் சார்ந்துதான் வருகிறது. கள்ளக்குறிச்சியிலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்வதற்கு இரண்டு வழிப் பாதை

2023 மார்ச் 24]

அகலமாக இருந்தால் இன்னும் சௌகரியமாக இருக்குமென்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டால், கூடுதலாக 2 துணைக் கேள்விகள் கொடுப்பேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்ட உளுந்தூர்பேட்டை–சேலம் சாலை என்பது NHAI-க்குச் சொந்தமான சாலை. கள்ளக்குறிச்சி நகரப் பகுதி வழியாக சென்ற சாலை, ஏற்கெனவே சீர்கெட்டுக் கிடந்தது. இதுகுறித்து சட்டமன்றத்திலே உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, துறையின் சார்பாக அந்தச் சாலைகளெல்லாம் செப்பனிடப்பட்டு, இன்றைக்கு சிறப்பாக இருக்கின்றன. அதை விரிவுபடுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு கூடுமான வரை இதில் கவனம் செலுத்தி, விரிவுபடுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இன்னொன்று, கள்ளக்குறிச்சி–திருவண்ணாமலை சாலை என்பது ஆன்மிகப் பெருமக்கள் அதிகமாக வந்து செல்கின்ற சாலை என்கின்ற காரணத்தால், அதை இரு வழிச் சாலையாக ஆக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, இந்தச் சாலை உட்பட, 8 சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டுமென்று ஒன்றிய அரசாங்கத்திடத்திலே நாங்கள் கொடுத்த பட்டியலிலே இதுவும் இருக்கிறது. ஏனென்றால், கிட்டத்தட்ட மூன்றாண்டு காலமாக தொடர்ந்து ஒன்றிய அரசாங்கத்திடத்திலே நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோதும், மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி அவர்களைச் சந்தித்தபோதும் இந்த 8 சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலைகளாக ஆக்க வேண்டுமென்று கடிதம் தந்தார்கள். தொடர்ந்து இரண்டு முறை முயற்சி செய்தும், அது கிணற்றிலே போட்ட கல்லாக இருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு நான் நேரடியாக மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கடிதம் கொடுத்திருக்கிறேன்.

ஒன்று நீங்கள் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குங்கள்; இல்லையென்றால் மாநில சாலைகளாக எங்களிடத்தில் ஒப்படையுங்கள்; நாங்களாவது விரிவுபடுத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அதில் ஒன்றுதான் இந்தத் திருவண்ணாமலை–கள்ளக்குறிச்சி சாலை. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டம் சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கப்பட்டு, தொடர்ந்து சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசின் அனுமதி பெறப்பட்டவுடன், திருவண்ணாமலை–கள்ளக்குறிச்சி சாலையை 4 வழிச் சாலையாக ஆக்குவதற்கு அரசு முயற்சி செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள்.*

திரு. எஸ். காந்திராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கேள்வியை கேட்க அனுமதித்ததற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வந்து விடுங்கள்,* please.

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகராக திண்டுக்கல் இருக்கின்ற பகுதியில் உள்ள சுற்றுலா மாளிகையில், போதிய அளவிற்கு வசதிகளுடன்கூடிய அறைகள் இல்லாத சூழ்நிலையில், திண்டுக்கல் தலைநகரில் ஏற்கெனவே உள்ள சுற்றுலா மாளிகைக்குப் பதிலாக, கூடுதலாக இன்னொரு சுற்றுலா மாளிகையைப் பல்வேறு வசதிகளுடன்கூடிய அறைகளுடன் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் ஏற்கெனவே பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சுற்றுலா மாளிகை இருக்கிறது. 2006–2011 இல், உணவுத் துறை அமைச்சராக நான்

2023 மார்ச் 24]

இருந்தபோது இந்த சுற்றுலா மாளிகையில் தங்கியிருக்கிறேன். அங்கு சுற்றுலா மாளிகை இருக்கிறது, இல்லையென்று சொல்ல முடியாது. அதை நாம் சீர் செய்யலாம். இன்றைக்கு, பல புதிய மாவட்டங்களையெல்லாம் உருவாக்கி இருக்கிறோம். அவற்றிலே, புதிய சுற்றுலா மாளிகைகளைக் கட்ட வேண்டிய ஒரு பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அது ஒரு பக்கம் இருக்கிறது. ஏற்கெனவே, பழைய சுற்றுலா மாளிகை இருக்கின்ற இடங்களிலெல்லாம் புதிதாக நாம் சுற்றுலா மாளிகை கட்ட வேண்டுமென்று எண்ணினால், அரசாங்கத்தினுடைய நிதிநிலை இடம் தராது. உங்களுக்கெல்லாம் தெரியும்; தமிழ்நாட்டினுடைய நிதிநிலை பற்றியெல்லாம் இப்போது budget இல் நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். சென்ற அரசாங்கம் பெரிய அளவில் நமக்குக் கடன் சுமையை வைத்துவிட்டுப் போயிருக்கிறது. வட்டியைக் கட்டுகிற நிலை இருக்கிறது. இந்நிலையிலே புதிய திட்டங்களையெல்லாம் அறிவித்து, அவற்றை நிறைவேற்ற வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே, பழைய சுற்றுலா மாளிகைகளையெல்லாம் புதுப்பிக்கின்ற நிலைதான் இப்போது இருக்கிறது. திண்டுக்கல்லுக்கு நானே வருகிறேன். புதிய சுற்றுலா மாளிகைக்கு அவசியம் இருக்குமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆணையைப் பெற்று, புதிய கட்டடங்களைக் கட்டலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குளச்சல் நகராட்சியிலே மிகப் பழமை வாய்ந்த ஒரு விருந்தினர் மாளிகை இருக்கிறது. சுமார் 100 வருடங்களாக அது இருக்கின்றது; மிகவும் வளர்ச்சிபெற்ற பகுதி. ஆனால், அதை* maintenance *செய்வதற்கு மட்டும்தான் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே, தகுந்த இடம் இருக்கிறது, புதிய கட்டடம் கட்டுவதற்கு வசதியாகவும் இருக்கிறது. ஆகவே, வளர்ச்சிபெற்ற ஒரு பகுதியிலே, மிகத் தேவையான ஒரு பகுதியிலே புதிய கட்டடம் கட்டி, அந்த சுற்றுலா மாளிகையை விரிவாக்கம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2023 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய தலைமையிடம் நாகர்கோவில். அங்கே சுற்றுலா மாளிகை மிகச் சிறப்பாக இருக்கிறது. குளச்சலைப் பொறுத்தளவில், ஏற்கெனவே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கதான்,—அந்தக் கட்டடம் பழைய ஓட்டுக் கட்டடம்; பிரிட்டிஷ்காரன் காலத்திலே கட்டப்பட்ட கட்டடம் அதில் ஓர் அறைதான் இருக்கிறது என்பதை நானே அறிவேன். அதனால்தான், அதனைச் சீர் செய்ய வேண்டும்; புனரமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, அங்கே புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிவு பெறட்டும். அதற்குப் பிறகு, நான் வருகின்றபோது பார்க்கிறேன். அங்கே விருந்தினர்கள், சுற்றுலாப் பயணிகள் எந்த அளவிற்கு வருவார்கள் என்ற எண்ணிக்கையைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, நிதி, இடம் தருமேயானால், புதிதாக சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் சுற்றுலா மாளிகை அமைப்பதற்கு நாங்கள் கோரிக்கைகள் வைத்ததன் அடிப்படையில், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதனை அறிவித்தமைக்கு மகிழ்ச்சியையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன்மலை தாலுகாவாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், அங்கே நீதிமன்றமும் இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. அங்கே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு துறைகளினுடைய அலுவலர் பெருமக்கள் வந்து தங்கி, மக்களைச் சந்தித்து ஆய்வு செய்வதற்கு*

2023 மார்ச் 24]

வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, அங்கே சுற்றுலா மாளிகை ஒன்றை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதை ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'அதை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா' என்று கேட்டு, உட்காருங்கள்.

திரு. தா. உதயசூரியன்: ஆகவே, இந்த நிதியாண்டிலேயே அதைச் செய்து தர வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், 4 அறைகள்தான் கட்டிக் கொடுப்பதற்கு கருத்துரு இருப்பதாக அறிகிறேன். அது மலைப் பகுதி என்பதால், 6 அறைகளாக உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளிலும், மலைகளிலும் கழகத்தை வளர்த்தவர் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். கல்வராயன்மலையில், பல்வேறு நிலைகளில், பல்வேறு பகுதிகளில் நாங்கள் சார்ந்திருக்கிற இயக்கத்தினுடைய கொடிகளையெல்லாம் வைத்தோம். கல்வராயன்மலையில் மாண்புமிகு முதலமைச்சரின் கால்படாத இடமில்லை. அவர் அனைத்தையும் அறிந்தவர். அங்கே, புதிதாக ஒரு தாலுகா அலுவலகம் உருவாக்கப்பட்டிருப்பது உண்மை. கல்வராயன்மலைக்கு மேலே சென்றால், தங்குவதற்கு இடமில்லை என்பதை அரசும் அறியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள், அதுகுறித்த கேள்வியை இங்கே தொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலைமை சரியாக இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்து, அங்கே ஒரு சுற்றுலா மாளிகை கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

[2023 மார்ச் 24

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு புதிதாக சுற்றுலா மாளிகை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிதாகக் கட்டப்படுகின்ற சுற்றுலா மாளிகை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியும், புதிதாக அமையவிருக்கின்ற மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகிலும் அமைந்தால் அது பயனுள்ளதாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுற்றுலா மாளிகையைக் கட்டுவதற்காக, சென்ற மாதம் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தா. உதயசூரியன், திரு. A.J. மணிக்கண்ணன் மற்றும் திரு. க. கார்த்திகேயன் ஆகிய மூன்று பேரையும் அழைத்துக்கொண்டு நேரில் சென்று, மூன்று இடங்களைத் தேர்வு செய்திருக்கிறோம். தேசிய நெடுஞ்சாலை அருகில் ஓர் இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்த இடம் கிட்டத்தட்ட 10 அடி அளவிற்கு பள்ளமாக இருக்கிறது. அதைச் சரி செய்தால்தான், அங்கே கட்டடம் கட்ட முடியும் என்பது ஒரு பக்கம். இன்னொன்று, ஏற்கெனவே கள்ளக்குறிச்சி நகராட்சி என்பது வளர்ச்சி பெற்றிருக்கிற, மாவட்டத் தலைநகராக இருக்கிறது. அங்கே வேறு ஒரு இடமும் இருக்கிறது. ஆனால், அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிற காரணத்தினால், அங்கே கட்டுவதா என்றொரு கேள்வி இருக்கிறது. எனவே, இந்த மூன்று இடங்களில் எந்த இடத்தில் கட்டுவது என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்தாலோசித்து, அதுகுறித்து நான் நேரடியாகப் பேசுகிறேன். கூடுமானவரை, அது தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் இருக்குமேயானால், அங்கே சென்று வருபவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை நான் அறிவேன். கூடுமானவரைக்கும் அங்கேயே கட்டுவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

2023 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***59396—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, லால்குடியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி சட்டமன்றத் தொகுதி, லால்குடியில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கூடுதல் வசதியுடன் கட்டுவதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, நிதியொதுக்கீடு செய்யும்பொருட்டு பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரை சுற்றோட்டத்தில் ஆணை பெறும்பொருட்டு, கோப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சுற்றோட்டத்தில் ஆணை பெறப்பட்டதும், மேற்படி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள், இருக்கையில் இல்லை. அதற்குப் பதிலாக அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*